புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# வேதநாயக சாஸ்திரியாரின் ‘சாஸ்திரிக் கும்மியில்’ பெண்ணியம்

**ஆய்வாளர் :**
**ஜோ. நெல்சன்,**
*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் ,*
*பிஷப் ஹீபர் கல்லூரி , பாரதிதாசன் பல்கலைக் கழகத்தோடு இணைவுப் பெற்றது.*
620017 *(மற்றும்) உதவிப் பேராசிரியர், இலயோலா கல்லூரி, மெட்டாலா,*
*இராசிபுரம்,*
Ref.No.05201/Ph.D.K6/Tamil Part time/April 2014 Date:29.09.2014.

**நெறியாளர் :**
**முனைவர். டே. கிறிஸ்துமணி,**
*உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,*
*பிஷப் ஹீபர் கல்லூரி திருச்சிராப்பள்ளி 620017.*

**ஆய்வுச்சுருக்கம்**

***தஞ்சை சரபோஜி மன்னரால் ஆதரிக்கப்பட்ட வேதநாயக சாஸ்திரியார் தமிழ்க்கிறிஸ்தவ இலக்கியத்தில் தனியிடம் பிடித்தவர். நூல்கள் பல எழுதி தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்திற்குக் கொடையாக நல்கிய பெருந்தகையாவார். பொருளாதார இன்மையின் காரணமாக அவரது நூல்கள் பலவும் வெளிவரவில்லை என்றாலும் சில நூல்கள் அவர் காலத்திலேயே மூன்று முறை வெளிவந்தது. அவற்றுள் ஒன்று சாஸ்திரக் கும்மியாகும். தமிழ்ச் சிற்றிலக்கிய உலகிற்கு ஓர் புதிய வரவாக அன்று கருதப்பட்டது. முப்பது ஆண்டுகளுக்கு முன் எழுந்த பெண்ணியத்தைப் பற்றி தமது கருத்தாக்கங்களை இந்நூலில் அவர் பதிவு செய்துள்ளார். மூடத்தனத்தை சாடுதல், சகுன சாஸ்திரத்தினால் ஏற்படும் தீங்கு, பில்லி சூனிய நம்பிக்கைகள் போன்றவற்றை சாடுதல்,***

***பெண்ணுரிமையை நிலை நாட்டுதல் உள்ளிட்ட பல செய்திகளை இந்நூலில் எளிமையானத் தமிழில் பதிவு செய்திருக்கிறார். எண்ணூறுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதி அக்கால பழக்க வழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும் சாடியுள்ளார். அவற்றுள் சில இக்கட்டுரையில் காணவியலும்.***

***கலைச் சொற்கள்: சகுனங்கள், நிமித்தங்கள், பில்லிசூனிய, சாடுதல், கும்மி, அலங்கரிப்பு,*** *பிசாசுகள், சலித்து.*

***முன்னுரை***

*தமிழ்க்கிறிஸ்தவ இலக்கியத்தின் கதி என அழைக்கப் படுகின்றவர்களாக எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை, வேதநாயக சாஸ்திரியார் ஆகியோரைக் குறிப்பிடமுடியும். நாட்டினர் பற்பலத் தொண்டுகளைச் செய்தார்கள் எனினும் தமிழகத்தில் பிறந்து, தமிழிற்காக அதுவும் தமிழ்க்கிறிஸ்தவ இலக்கியத்திற்காகத் தம்மையே அர்பணித்தவர்களுள் இவ்விருவரும் சிறப்புக்குரியவர்கள். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் கிறிஸ்த்தவ சமயத்தைப் பரப்பவந்த அயல்நாட்டினவர் தம் தொண்டும், அச்சமையத்தை ஏற்றுக் கொண்ட உள்நாட்டவர் தொண்டும் என கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள், மொழியைக் கருவியாகக் கொண்டு சமய சிந்தனைகளை, பழைய இலக்கிய மரபை ஏற்று புதிய இலக்கிய வகைகளைத் தந்து சென்றனர். தமிழ்மொழி அறிவோடு, மொழிப் புலமைப் பெற்று விளங்கிய உள்நாட்டுக் கிறிஸ்த்தவத் தொண்டர்கள் பலர் உள்ளனர். ஆனால் அவர்களில் வேதநாயக சாஸ்திரியாருக்கென ஒர் தனியிடம் உண்டு என்பது மறுக்கவியலாது.*

*தமிழ்க்கிறிஸத்தவர் தொண்டர் வரிரையில் சிறப்பிடம் பெறும் வேதநாயக சாஸ்திரியார் திருத்த முறை கிறிஸ்தவர் பிரிவைச் சார்ந்தவர் தமிழகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டத் திருத்தமுறைக் கிறிஸ்த்தவ முதன்மைத் தொண்டராக இவர் விளங்கினார். இவர் தமிழ் மொழியை இலக்கிய மரபிற்குகேற்பத் தன்னை அர்ப்பணித்தவர் என்ற சிறப்பு இவருக்கு உண்டு. சாஸ்திரியார் இயேசுபிரான் மீது மிகுந்தப்பற்று கொண்டவர் என்பதாலும், புலமை, முதுமை பெற்ற முதுபெரும் புலவர் என்பதாலும், ஏனைய புலவர்கள் சமகாலப் புலவர்களைப் போலத் தமிழறிஞர் என்பதாலும் இவரது படைப்புகளை பலர் ஆய்ந்து வருகின்றனர்.*

*நூற்று இருபத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் சாஸ்திரியார். கிறிஸ்தவ சமயத்திற்கு மட்டுமல்லாது பொது நிலையிலும் சில நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று சாஸ்திரக்கும்மி என்பதாகும். இந்நூலில் பெண்ணை விளித்துஅறிவுரைக் கூறுவதாகவும் அவ்வறி வுரையின்வழி சாஸ்திரியார் காட்டும் மூடநம்பிக்கைகளை அழித்தல், அவர் எதிர்நோக்கும் பெண்ணியம் பற்றி அறிதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த* ***கட்டுரை*** *அமைகின்றது.*

***சாஸ்திரக்கும்மி***

*சாஸ்திரக்கும்மி நான்கு அடிகளைக் கொண்டதாகவும் எண்ணூற்றைம்பது பாடல்களை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது. இப்பாடல்களில் காணலாகும் கருத்துக்கள் கிறிஸ்த்தவர்களுக்கு மட்டுமேயன்றி ஏனையோர்க்கும், மிகுந்தப் பயனையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தக் கூடியதாக அமைகின்றது. மூடநம்பிக்கைகளுக்கு இடமளிக்காமல் தீண்டாமை, ஏற்றத்தாழ்வுகளை விளக்கி உலகம் போற்ற ஒரு பெண் வாழ்வதே பெண்ணியம் என்பதை அவர் கருத்தில் கொண்டுள்ளார். மூடப்பழக்க வழக்கங்கள் பெண்ணின் முன்னேற்றத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பெறும் தடையாக உள்ளது. என்பதை எண்பத்தொரு தலைப்பபகளின் கீழ் சாஸ்திரியார் எடுத்துரைக்கின்றார். ஒவ்வொரு பாடலிலும் ஞானப் பெண்ணே என முன்னிலை வியங்கோள் பரவலாக எழுதிச் செல்கிறார்.*

***சாதிகள், திருமண பேதங்கள்***

*இறைவன் படைத்த நாட்களில் அனைத்து நாட்களும், அனைத்து மாதங்களும் நல்ல நாட்களாகவும், நல்ல மாதங்களாகவே இருக்கின்றன. ஆனால் ஆடி மாதத்தை தீண்டா நோக்கோடு பார்கின்ற ஒரு மூடப்பழக்கம் தொண்டு தொட்டு நிலவிவருகின்றது. இதுசமூக முன்னேற்றத்திற்கும், பெண்ணின் வாழ்விற்கும் மிக இடையு+றாய் இருப்பதாகக் கருதி சாஸ்திரியார் அதைத் தவிர்க்குமாறு உணர்த்துகிறார். ஆடிக்கு முன் திருமணம் நடைபெற வேண்டும் என அவசரபடுத்துவதும், ஆடியில் கூடலாகாது எனத் தம்பதியினரைத் தடுத்துவைப்பதும் மிக கொடுமை என்பதைக் கூற வருகின்ற சாஸ்திரியார்,*

> *“ஆடிமாதம் கலியாணம் செய்யலாகாது என்று விளக்கி வைக்கும்*
>
> *வேடிக்கைக் காரரண்டகச் சாதிக்கு வேதமேனடி ஞானப் பெண்ணே*
>
> *ஆடிமாதம் வருதென்று பயத்தை இல்லாத பொய்யைச் சொல்லி*
>
> *கூடி நீ மணம் செய்து கொண்டாலும் உன் குற்றம் தீருமோ ஞானப்*
>
> *பெண்ணே ஆடிமாதம் அவசரமோ அவபத்தியால் வந்தது அவசரமோ*
>
> *தேடிக் கொண்டது அவசரமோ அதைத் திட்டமாய் சொல்லடி ஞானப்*
>
> *பெண்ணே”*

***(சாஸ்திரக் கும்மி ப.16)***

*என்று சாஸ்திரியார் மூடநம்பிக்கையைச் சாடுகிறார்.*

***சகுன சாஸ்திரங்கள்***

*சகுனங்களும், நிமித்தங்களும் இன்றைக்கு வெகுவாக சமூகத்தைப் பாதிக்கிறது. சகுன நிமித்தங்களை ஒரு பொறுட்டாக எண்ணுவதாலும், அதை கடைபிடிப்பதாலும் எந்தப் பயனும் கிடைக்காது என்பதை அறிவுரையாக பெண்ணிற்கு கூறுகிறார். இதை யெல்லாம் உதரித் தள்ளுவதே நவீனப் பெண்ணியம் என்று அவர் கருதுகிறார்.*

இறைநம்பிக்கை இருக்கும் போதும் அறிவுபு+ர்வ செயல்படுகின்ற போதும், சகுனங்களோ, நிமித்தங்களோ நம்மை ஒன்றும் செய்துவிடாது என்பதில் சாஸ்திரியார்க்கு நம்பிக்கை உண்டு. எந்த விஷயத்திலும் நிமித்தம், சகுனங்களையும் உதரித்தள்ளி அறிவு செயல்படுவதே பெண்ணியம் எனசாஸ்திரியார் கருதுகிறார். பல்லிகத்துதல், ஆந்தை அலறுதல், பு+னை, நாய்குறுக்கே செல்லுதல், நரி குறுக்கிடுதல் ஆகியவற்றை மையப்படுத்தி சாடுகிறார். இக்கருத்தை

*"பட்சி சாஸ்திரம் பார்பானேன் நீ பல்லி சாஸ்திரம் பார்பானேன்*
*அச்சமாய் நடுங்கி திரிய உனக்கு ஆண்டவன் இல்லையோ ஞானப்*
*பெண்ணே பு+னையும் நாயும் பொல்லாப்பானால் அந்த பொல்லாத*
*பு+னையும் நாயையும் வைத்து ஏனிப்படி வளர்த்தாய் உன் பயணத்து இடர்*
*செய்யுமல்லோ ஞானப்பெண்ணே நரிகுறுக்கே போனாக்கால்*
*கனநன்மைகள் உண்டாம் என்று சொன்னால் தெரிய உன்னுட சேதி*
*அதற்கெவர் செப்பனாரடி ஞானப் பெண்ணே"*

***(சாஸ்திரக் கும்மி ப. 25)***

*என்று நிமித்தம், சகுனம் பார்க்கும் மக்களுக்கு இவ்வாறு புத்தி புகட்டுகிறார்.*

***பிள்ளைப் பேறு சாஸ்திரங்கள்***

குழந்தைகள் ஈன்றெடுத்த வீடுகளில் வேப்பிலைக் கொத்தை சொருகி வைப்பதும் அதனால் பேய் பிசாசுகள் அண்டாது எனவும் கிராமபுறத்திலும் நகர்புறத்திலும் ஒரு நம்பிக்கை உண்டு. இதுவும் ஒரு விதமான மூடப்பழக்கம் இதையும் விளக்க வேண்டுமென்று சாஸ்திரியார் பெண்ணிற்கு அறிவுரை கூறுவதுப் போல் கூறுகிறார். வேப்பங்கொத்தை சொருகி வைப்பதாலோ பிச்சை எடுப்போரை அதட்டிவிரட்டுவதாலோ தீய செயல் ஏதும் நடவாது அனைத்தும் இயல்பாகவே இருக்கும் என்பதையும்

*"பிள்ளை பெற்றவள் வீட்டினில் வேப்பலை பேய்கள் வராமல் சொருகி வைத்து*
*எள்ளை வாயினும் பிச்சையிடாமல் நீதியோ ஞானப் பெண்ணே*
*வேப்பிளை கஞ்சியே வந்த பிசாசு வெருண்டோடிப் போவது மெய்யானால்*
*வேப்பமரத்திலே பேய்நிற்கு தென்றதை வேண்டிக் கொள்வதேன்*
*ஞானப் பெண்ணே"*

***(சாஸ்திரக் கும்மி ப. 32)***

*என்கிறார். மூடப்; பழங்கங்களில் நமது சிந்தையைச் செலுத்தாமல் இறைவனை ஏற்று நமது வாழ்வி;ல் ஏற்படும் எல்லா நல்ல, கெட்ட செயல்களுக்கும் காரணம் நாமமே என்று எற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினை சாஸ்திரியார் எடுத்துரைக்கின்றார்.*

***பில்லிசூனியம் நம்பிக்கைகள்***

*கிராமங்களில் வாழும் மக்களை பெரிதும் பயம் கொள்ளவைக்கும் தீயசெயல்களாக உள்ள பில்லிசூன்யத்தை வேதநாயகசாஸ்திர் கண்டிக்கிறார். எவர்கேனும் இடையு+று செய்தாலும் அல்லது தொடர் சண்டைகள் குடும்பங்களில் நிலவி வந்தாலோ அது ஏவல் காரணமாகவும், மாந்திரிகம், பில்லிசூன்யம் முதலியவற்றை வைத்ததின் காரணமாகவே ஏற்பட்டிருக்கலாம் என் நம்புவதையும் தவிர்க்க வேண்டுமென வேதநாயகசாஸ்திரியார் கருதுகிறார். இது மேலைநாட்டிலில்லை நமது நாட்டில்தான்; அதிகமாகப் பரவிக் காணப்படுகிறது என்றும் அவர் நையாண்டியாகக் கூறுகிறார். ஒருவேளை ஏவல் மந்திரம் செய்தவர்கள் அதனாலே மடியக்கூடும் என்பதையும் அவர் கூறுகிறார். இக்கருத்தை,*

> *"ஏவல் வந்தன்ன என்செய்யும் அவர் இட்டகுறி;கள் என்ன செய்யும்*
>
> *காவலாய் உன்னைச் சம்மனசு நின்று காக்காமல் போகுமோ ஞானப் பெண்ணே*
>
> *பில்லிசூனியத்தாலோ ஒரு வேளைப் பேசாமல் கொல்ல விடமானால்*
>
> *வல்ல பராபரன் இல்லையோ மதியெங்கடி ஞானப் பெண்ணே*
>
> *பில்லிவைத்துக் கொல்க்கூடுமென்றால் போரில் பீரங்கி குண்டுகள்*
>
> *வல்லமையாகிய சேவகர்கள் ஏன் இந்த மண்ணாள்வோருக்கு*
>
> *ஞானப் பெண்ண இன்னும் இப்படித் தேசத்துராசரில் எத்தனை சூனியக்காரர்*
>
> *பின்னும் ஐரோப்பியர்கள் தங்களின் ஆரையும் பார்த்ததுண்டோ ஞானப் பெண்ணே சூனியக்காரன் அனுப்பிய பேயேது சூனியக் காரனைத் தானேகொண்டு சூனியக்காரன் கடைசியில் புல்போய்த் துஞ்சுவானடி*
>
> *ஞானப் பெண்ணே"*
>
> ***(சாஸ்திரக் கும்மி ப. 49)***

*என பகுத்தறிவு சிந்தனையைக் காட்டுகிறார். கத்தியை எடுத்தவனுக்கு கத்தியாலேயே சாவு ஏற்படும் என்ற சொற்படி நாம் பிறர்க்கு செய்யும் தீமையானது பிறகு நம்மையே கொன்று விடும் என்பதை சாஸ்திரியார் எடுத்துரைக்கின்றார்.*

***மாட்டுப் பொங்கல், சாஸ்திரப் பொங்கல்***

*வருடமெல்லாம் உழைத்து காற்று, வெயில், மழையென்று பாராமல் உடலை வருத்தி உழைக்கின்ற மாட்டிற்கு வருடத்தில் ஒரு நாள் சிறப்பு செய்தலையும் வேத நாயகர் நையாண்டியாக ஏளனமாக கண்;;டிக்கிறார். அந்த அவப்பேறு இயன்ற போதெல்லாம் அந்த வாயில்லாத ஜீவனுக்கு இயன்ற நன்மையை செய்ய*

*வேண்டுமென்று அவர் எதிர்பார் கின்றார். பெண்ணிற்கு அறிவுரைக் கூறுவது போல் மாடுகள் வைத்திருப்போருக்கு இந்த அறிவுரைகளைக் கூறுகிறார். இக்கருத்தை,*

*"மாட்டை மெத்த அலங்கரித்து அந்தமாட்டுக் கொம்பிலே சல்லிக் கட்டி*

*மாட்டு கழுத்திலே மாலை மாட்டி மாலையும் தூக்கினாய் ஞானப் பெண்ணே*

*மாடுனக்கு தெய்வமான காலம் அந்த மாட்டை வருஷ மெல்லாம்*

*முழுதும் கூடியடித்து உதைத்துவதைப்பதேன் ஞானப் பெண்ணே"*

***(சாஸ்திரக் கும்மி ப.90)***

*என்கிறார். வாய்இல்லாத மாட்டை தேவைக்கு பயன்படுத்தும் போது அதற்கு துன்பத்தை விளைவித்து பிறகு அதற்கு நல்லது செய்யும் பொருட்டு பொங்கல் வைத்து மாட்டை இறைவானக எண்ணி வணங்குவதில் பலனில்லை என்கிறார்.*

***இழவு சடங்கு சாஸ்திரங்கள்***

*இழப்பு என்பது தாங்க முடியாத நிகழ்வுக் குறிப்பாகக் கணவனை இழந்த கைம்பெண்களுக்கு இது ஏற்றுக் கொள்ளமுடியாத கொடுந் துன்பமாகும். கணவன் இறந்த சோகத்தில் மனைவி இருக்க அக்கைம்பெண்ணிற்கு மாலையிடுவதும், மஞ்சள், குங்குமம் வைப்பதும் சீவிசிங்காரித்து புது புடவை அணிவித்து பெண்ணிற்கு இழைக்கப்படும் உச்சக்கட்ட கொடுமை இதை வன்மையாக சாஸ்திரியார் கண்டிக்கிறார் .அவ்வாற பெண்ணை மேலும் மேலும் இழிவு படுத்துவதாகும் எனக் கருதுகிறார். இச்செய்தியை,*

*"இருவரையும் ஒரு பலகை தன்னிலே சோடாக அமரவைத்து*

*இருபிணத்துக்கும் தண்ணீர்வார்த்து நீ முழக்காட்டினால் ஞானப் பெண்ணே*

*ஒருபிணத்து உயிர் போன பிணமதில் ஒரு பிணம் உயிருள்ள பிணம்*

*இரு பிணத்துக்கும் சோடிப்புச் செயத்து எந்த விதமடி ஞான் பெண்ணே*

*மஞ்சள் குளித்துத் தலை முடித்து அந்த மாதுக்கு எல்லாம் பு+போட்டு*

*மிஞ்சப் புதுப்பெண்ணைப்போல வந்த தென்ன நீ மெத்த சிங்காரித்தாய்ஞானப்*

*பெண்ணே கோடடியுடுத்தி உடைமையிட்டு செத்த கொழுனருடன்*

*கூடவைத்து தேடியாக்கினைகள் செய்யும் சடங்கெல்லாம் செய்தாய் அன்றைக்கு*

*ஞானப் பெண்ணே"*

*(சாஸ்திரக் கும்மி ப.110)*

*என்ற பாடல் வரிகள் மூலம் குறித்து அறியாமையிலிருந்து மக்கள் வெளிவர வேண்டும் என்ற தம் கருத்தைப் பதிவு செய்கிறார்.*

***நாள் பார்த்தல்***

*சாதகம், நாள் பார்த்தல் ஆகியனவும் இக்காலத்தில் மூடநம்பிக்கையாக மக்களை வாட்டி வதைக்கிறது. ஜாதகம் எழுதுவது, நல்லநாள், தீயநாள், சாஸ்திரம், ஒவ்வொரு கிழமைக்கும் பொல்லாத காரியத்தைக் கூறுதல் ஆகியவற்றை மக்கள் இடையறாது கடைபிடிக்கின்றனர். குறிப்பாகப் பெண்களுக்கு ஜாதகம் நாள்பார்த்தல் உள்ளிட்டவைகள் பெரும்பாதகமாக அமைகிறது. வேதநாயக சாஸ்திரியார் இதையும் வன்மையாகக் கண்டிக்கிறார். எல்லா நாட்களிலும் நல்லவை தீயவை நடக்கும் என்று தட்டிக் கழிப்பதும் செயல்களைச் செய்வதற்கு தயங்குவதும் என திண்டாடிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலைக்காகப் பரிதவிக்கின்றார். இக்கருத்தை,*

> *"பிள்ளைக்கு நூறு வயதென்று சொல்லியே பெரிய சாதகம் ஒன்றெழுதி*
> *கள்ளத் தனமாக முப்பதில் நாற்பதில் கண்டமென்பானேன் ஞானப் பெண்ணே*
> *செவ்வாய்க்கேதொரு காரியமாகிலு;ம் செய்ய வொண்ணாது பயணம் செய்*
> *வெள்ளிக் கிழமை பிறர் பொருள் வாங்குதல் மேன்மை யென்பார்கள்;*
> *சனிக்கிழமைக்கு கோடி உடார் அது சங்கடமென்று சலித்துக் கொள்வார்.*
> *இப்படி வெள்ளி சனியுடன் ஞாயிறு மெத்த செவ்வாயும் வியாழனும்*
> *தப்பிதமானால் அப்புறம் எந்த நாள் சரிதாமடி ஞானப் பெண்ணே*
> *எல்லா நாளையும் நல்ல நாளென்று என்னை படைத்தவன் செய்திருப்பது*
> *பொல்லா நாளென்று நல்ல நாளென்றும் புகழ்வதேதடி ஞானப் பெண்ணே"*

*(சாஸ்திரக் கும்மி ப.118)*

*என்ற பாடல் வரிகளால் சாஸ்திரியார் எல்லா நாளும் நல்லநாளே என்று இறைவன் குறிப்பிட்டதை இங்கு எடுத்துரைக்கிறார்.*

***முடிவுரை***

*கிறித்தவ இலக்கிய இலகில் அதிமான இலக்கிய கூறுகளைப் படைத்தவர் வேதநாயக சாஸ்திரியார் ஆவார். தமிழ் இலக்கிய உலகிற்கு பிற புலவர்களுக்கு ஈடாகக் கிறிஸ்தவக் கவிஞர்கள் இலக்கியப் பணி செய்துள்ளனர் .ஆனால் சாஸ்திரியார் படைப்புகள் முழவதும் சமயச் செய்திகளையும் பெண்ணினத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், மூடநம்பிக்கையினாலும் சாதி சமய சடங்குகளாலும் பெண்களுக்கு ஏற்படும் பெரிய கொடுமையான துயரத்தை நாம் செய்ய கூடாது என்கிறார். ஆடிமாதத்தில் திருமணம்செய்யும் முறைமைக்கு சாஸ்திரியார் அழகாக முஸ்லிம் மதத்தவரைச் சான்று காட்டி தம் கருத்தை நிறுவுகிறார்.இறைவன் நமக்கு*

தந்த எல்லா நாள்களும் நல்ல நாள், இறைவன் நமது உடனிருக்கும் போது தீயவினைகள் ஏதும் நம்மை அண்டாது என்பதையும் இக்கட்டுரையின் வழி எடுத்துரைக்கின்றார். இலக்கிய நோக்கம் கொண்டு இந்த உலகிற்காக சாஸ்திரியார் படைத்த இந்தசாஸ்திர கும்மி என்ற நூலானது மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று வலியுறுத்துகிறார்.

## துணைநூற் பட்டியல்


1. வேதநாயக சாஸ்திரியார்.,சாஸ்திரக் கும்மி, காந்தி அச்சகம், ஸ்ரீவைகுண்டம்,1969.
2. அழகப்பன்,ப., நாட்டுப்புறப்பாடல்கள் - திறனாய்வு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை, முதற்பதிப்பு, நவம்பர், 1973.
3. அரவிந்தன்,மு.வை., தமிழ்நாட்டுப் பாடல்கள், லட்சுமிபதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1977.
4. இராமநாதன். ஆறு., நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், முதற் பதிப்பு, ஏப்ரல் 1982.
5. கைலாசபதி,க, பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, செப்டம்பர் 1978.
6. சக்திவேல்.சு. நாட்டுப்புறஇயல்ஆய்வு, மாணிக்கவாசகர் நூலகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1983.